செய்தி வெளியீடு எண் : 24 நாள் :14.04.2018

***தேனி மாவட்டம்***
***சமூக நீதி நாள் விழாவில்***
***மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள்***
***42 பயனாளிகளுக்கு ரூ.11.56 இலட்சம் மதிப்பிலான அரசின் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.***

*****

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சமூக நலத்துறையின் சார்பில் இன்று (14.04.2018) நடைபெற்ற சமூக நீதி நாள் விழாவில், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ்,இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட முதன்மை நீதிபதி திரு.எஸ்.செந்தில் குமரேசன் அவர்கள் முன்னிலையில் மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்ட கலை நிகழ்ச்சி, கண்காட்சி அரங்கு மற்றும் சிறப்பு மருத்துவ முகாமினை பார்வையிட்டு, 42 பயனாளிகளுக்கு ரூ.11.56 இலட்சம் மதிப்பிலான அரசின் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

விழாவில், மாவட்ட ஆட்சித்தலைவர் பேசும்போது தெரிவிக்கையில், மத்திய, மாநில அரசுகளால் ஏழை, எளிய மக்களின் வாழ்க்கைத்தர மேம்பாட்டிற்காகவும், முன்னேற்றத்திற்காகவும், செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் மற்றும் செயல்படுத்தவுள்ள புதிய திட்டங்கள் ஆகியவற்றை கிராமங்களில் வசிக்கின்ற பொதுமக்களும் நன்கு தெரிந்திடும் வகையில் விழிப்புணர்வு ஏற்படுத்திடவும், விவசாயிகளின் வருமானத்தை இருமடங்காக உயர்த்திடும் வகையில் கிராம சுயாட்சி பிரச்சாரம் (Gram Swaraj Abiyan) திட்டத்தின் கீழ் 14.04.2018 முதல் 05.05.2018 வரையிலான நாட்களில் நடத்திட உத்தரவிடப்பட்டுள்ளதை தொடர்ந்து, தமிழகத்தில் 1,477 கிராமங்களில் நடைபெறவுள்ளது. அதன்படி, நமது மாவட்டத்தில் பெரியகுளம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட எண்டப்புளி ஊராட்சிக்குட்பட்ட இ.புதுக்கோட்டை, தேனி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கோட்டூர் மற்றும் சீலையம்பட்டி, சின்னமனூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட அழகாபுரி, ஆண்டிபட்டி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட குன்னூர் மற்றும் தேக்கம்பட்டி ஆகிய 6 கிராமங்களில் நடத்தப்படவுள்ளது.

கிராம சுயாட்சி பிரச்சார இயக்கம் வாயிலாக கிராமங்களில் தன்னிறைவை ஏற்படுத்தும் வகையில், அரசின் சார்பில் செயல்படுத்தப்படும் விலையில்லா எரிவாயு இணைப்பு, மின் இணைப்பு, அரசின் பிற நலத்திட்ட உதவிகளை தகுதி வாய்ந்த பயனாளிகளுக்கு வழங்கிடவும், பொதுமக்களின் தேவைக்கேற்ப வருமானச்சான்றிதழ், சாதிச்சான்றிதழ் மற்றும் இதர சான்றிதழ்கள் வழங்கிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், கிராமம் மற்றும் நகர்ப்புறங்களில் சுகாதாரத்தை மேம்படுத்திடும் வகையில் ஊரக வளர்ச்சித்துறை, வேளாண்மைத்துறை, பொது சுகாதாரத்துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை ஆகிய பல்வேறு துறைகளை இணைத்து சுகாதாரப்பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது. மருத்துவ காப்பீட்டுத்திட்டம், விவசாயிகளின் வருமானத்தை முன்னேற்றுகின்ற திட்டம், முழுசுகாதார திட்டம் ஆகியவற்றை குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துகின்ற வகையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே கிராமப்புறங்களில் உள்ள ஏழை-எளிய மக்கள் குறிப்பாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்கள் மத்திய, மாநில அரசுகளால் செயல்படுத்தப்பட்டு வருகின்ற திட்டங்களை தெரிந்துகொண்டு பயனடைய வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இவ்விழாவில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.வீ.பாஸ்கரன் அவர்கள், தேனி பாராளுமன்ற உறுப்பினர் திரு.ஆர்.பார்த்திபன் அவர்கள், கம்பம் சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.டி.கே.ஜக்கையன் அவர்கள், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ச.கந்தசாமி அவர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் திருமதி பா.திலகவதி அவர்கள், மகளிர் திட்ட அலுவலர் திரு.கல்யாணசுந்தரம் அவர்கள், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) (பொ) திருமதி.ரசிகலா அவர்கள், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் திருமதி கிருஷ்ணவேணி அவர்கள், மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி உமையாள் அவர்கள், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் திரு.ரகுபதி அவர்கள், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திருமதி அபிதாஹனீப் அவர்கள், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.ச.தங்கவேல் அவர்கள், தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) திரு.து.தங்கவேல் அவர்கள், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு.எஸ்.பி.எம்.சையதுகான் அவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**